## மே - 10 - புதன்
### புனித டேமியன் யோசப்
### கடவுளே! எம்மீது இரங்கி, எமக்கு ஆசி வழங்குவீராக!
### திபா. 67:1

**முதல் வாசகம் : திருத்தூதர் பணி 12 : 24 –-- 13 : 5**

அக்காலத்தில் கடவுளின் வார்த்தை மென்மேலும் பரவியது.
பர்னபாவும் சவுலும் தங்கள் திருத்தொண்டை முடித்தபின், மாற்கு எனப்படும் யோவானைக் கூட்டிக்கொண்டு, எருசலேமிலிருந்து திரும்பிச் சென்றார். அந்தியோக்கிய திருச்சபையில் பர்னபா, நீகர் எனப்படும் சிமியோன், சிரோன் ஊரானாகிய லூக்கியு, குறநில மன்னன் ஏரோதுவுடன் வளர்ந்த மனாயீன், சவுல் ஆகியோர் இறைவாக்கினராகவும், போதகராகவும் இருந்தனர். அவர்கள் நோன்பிருந்து ஆண்டவரை வழிபடும்போது தூய ஆவியார் அவர்களிடம், ”பர்னபாவையும் சவுலையும் ஒரு தனிப்பட்ட பணிக்கென நான் அழைத்திருக்கிறேன். அந்தப் பணிக்காக அவர்களை ஒதுக்கி வையுங்கள்” என்று கூறினார். அவர்கள் நோன்பிலிருந்து இறைவனிடம் வேண்டினார்கள் தங்கள் கைகளை அவ்விருவர்மீது வைத்துத் திருப்பணியிலமர்த்தி அவர்களை அனுப்பி வைத்தார்கள். இவ்வாறு தூய ஆவியாரால் அனுப்பப்பட்டவர்கள் செலூக்கியாவுக்குச் சென்றார்கள் அங்கிருந்து சைப்பிரசுக்குக் கப்பலேறினார்கள். அவர்கள் சாலமி நகருக்கு வந்து அங்குள்ள யூதரின் தொழுகைக் கூடங்களில் கடவுளின் வார்த்தையை அறிவித்தார்கள் யோவானைத் தங்கள் உதவி யாளராகக் கொண்டிருந்தார்கள்.

**பதில்பாடல் :** கடவுளே மக்களினத்தார் உம்மைப் போற்றிப் புகழ்வார்களாக

**நற்செய்தி : யோவான் 12 : 44 - 50**

அக்காலத்தில் இயேசு உரத்த குரலில் கூறியது: ”என்னிடம் நம்பிக்கை கொள்பவர் என்னிடம் மட்டும் அல்ல, என்னை அனுப்பியவரிடமே நம்பிக்கை கொள்கிறார். என்னைக் காண்பவரும் என்னை அனுப்பியவரையே காண்கிறார். என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இருளில் இராதபடி நான் ஒளியாக உலகிற்கு வந்தேன். நான் கூறும் வார்த்தைகளைக் கேட்டும் அவற்றைக் கடைப்பிடியாதவருக்குத் தண்டனைத் தீர்ப்பு வழங்குபவன் நானல்ல. ஏனெனில் நான் உலகிற்குத் தீர்ப்பு வழங்க வரவில்லை மாறாக அதை மீட்கவே வந்தேன். என்னைப் புறக்கணித்து நான் சொல்வதை ஏற்றுக்கொள்ளாதவருக்குத் தீர்ப்பளிக்கும் ஒன்று உண்டு என் வார்த்தையே அது. இறுதி நாளில் அவர்களுக்கு அது தண்டனைத் தீர்ப்பு அளிக்கும். ஏனெனில் நானாக எதையும் பேசவில்லை என்னை அனுப்பிய தந்தையே நான் என்ன சொல்லவேண்டும், என்ன பேசவேண்டும் என்பதுபற்றி எனக்குக் கட்டளை கொடுத்துள்ளார். அவருடைய கட்டளை நிலை வாழ்வு தருகிறது என்பது எனக்குத் தெரியும். எனவே நான் சொல்பவற்றையெல்லாம் தந்தை என்னிடம் கூறியவாறே சொல்கிறேன்“ என்றார்.

**தியானம்:** இன்றைய இறை தியானங்கள் நாங்கள் பாவங்களினால் இருளில் மூழ்கிக் கிடக்கின்றோம். எமது பாவங்களை மன்னித்து ஒளிக்கு எங்களை அழைத்து சென்று, தந்தையின் சித்தத்தை நிறைவேற்ற இறைமகன் இயேசு இவ்வுலகிற்கு வந்தார். அதை நாங்கள் நம்ப வேண்டும். அப்பொழுதுதான் அவரை அனுப்பிய தந்தையை நாங்கள் ஏற்றுக் கொள்ளின்றோம். நாங்கள் ஆண்டவரை ஏற்றுக் கொள்ளின்றோம் என்று வாயளவில் சொல்கின்றோமே தவிர நடைமுறையில் காணப்படுவதில்லை. எமது உள்ளம் பொறாமை, ஆணவம், கர்வம் இவற்றினால் பாவத்திற்கு அடிமைப்பட்டு மற்றவர்களை ஏற்றுக்கொள்ள மறுத்து வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். நாங்கள் இவற்றிலிருந்து விடுபட நோன்பிருந்து மன்றாடிக் கேட்கும் பொழுது அவர் அனைத்திலுமிருந்து விடுதலை தருவார். மேலும் அன்று ஆவியானவரை அனுப்பி சின்னப்பரையும் சீலாவையும் தனது பணிக்காக தெரிவு செய்து வழிநடத்தினாரோ, அதே போன்று எங்களையும் தெரிவு செய்து நிலைவாழ்வை தந்தருள்வார். எனவே நானே உலகின் ஒளி என்று கூறிய இயேசுவின் வார்த்தைகளில் நம்பிக்கை கொண்டு, அன்பின் கட்டளையை கடைப்பிடித்து ஒளியின் பாதையில் நடக்க எங்களைத் தயார்படுத்துவோம்.